DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 34/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **சிக்கந்தர் பாஷா (P.w. 2)** |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of October 2025

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திருச்சுழி பாரத ஸ்டேட் வங்கியில் கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். சிக்கந்தர் பாதுஷாவுடைய காசோலை எண்.028268 ஆனது காசிராஜன் என்பவர் வசூலுக்காக 23.02.2024 ம் தேதியன்று தாக்கல் செய்துள்ளார். ஆனால் கடந்த 05.12.2022 ம் தேதியன்று மேற்படி காசோலையினை நிறுத்தி வைக்கவேண்டும் என்று சிக்கந்தர் பாதுஷா எழுத்து மூலமாக மனு அளிந்திருந்தார். அதன் அடிப்படையில் மேற்படி காசோலையானது 23.02.2024 ம் தேதியன்று Cheque lost and stopped by customer என்று திருப்பப்பட்டது. காசோலை எண்.028266 முதல் 028271 வரையிலான காசோலைகளும் 042426 முதல் 042432 வரையிலான காசோலைகளும் தொலைந்துவிட்டதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனு

**சாசாஆ 1** ஆகவும் வங்கியின் Cheque referred and returned register இவ்வழக்கிற்குரிய பகுதி உண்மை நகல் **சாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எ.த.கு.வி–**

காசோலை எண்.028266 முதல் 028271 வரையிலான காசோலைகள் தொலைந்துவிட்டது அதன் செயல்பாடுகளை நிறுத்திவைக்கவேண்டும் என்று மனு அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிற்குரிய காசோலை வசூலுக்கு கொடுக்கப்பட்ட தேதி 23.02.2024ம் வருடம் என்றும் கிட்டதட்ட 2 வருடம் கழித்துதான் வசூலுக்கு வரப்பட்டது என்றால் சரிதான். காசோலையை நிறுத்திவைப்பதற்கு கேட்டுக்கொண்ட நாளில் இருந்து இந்த வழக்கிற்குரிய காசோலையை தாக்கல் செய்யும்வரை வேறு எந்த காசோலைகளும் வசூலுக்காக வங்கிக்கு வரவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.